**அனுப்புநர்**

கு.தேவராஜன், எம்.ஏ., எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை–600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்

**ந.க.எண். 038627 / எச்.1 / 2013 நாள் : 04.09.2013**

**அய்யா / அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலைத் தேர்வு, செப்டம்பர் / அக்டோபர் 2013 – தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் – செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

–––––

நடைபெறவிருக்கும் செப்டம்பர் / அக்டோபர் 2013, மேல்நிலைத் தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள், ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள், பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை ஒப்படைக்க வேண்டிய இடம் மற்றும் அறிவுரைகள் குறித்தான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தங்கள் நம்பிக்கையுள்ள,**

**(ஓம்/–)**
**இயக்குநர்**

**இணைப்பு :** செய்திக்குறிப்பு.

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006
# மேல்நிலைத் தேர்வு, செப்டம்பர் / அக்டோபர் 2013
### தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்
## செய்திக் குறிப்பு

செப்டம்பர்/அக்டோபர் 2013–ல் நடைபெறவுள்ள மேல்நிலைத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்–லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தனித்தேர்வர்கள் **www.dge.tn.gov.in** அல்லது **tndge.in** என்ற இணையதளத்திற்குச் சென்று, அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி, விவரங்களைபூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்**

| | |
|---|---|
| 1) | இத்துறையால் நடத்தப்பட்ட மேல்நிலை தேர்வெழுதியோர், தேர்ச்சி பெறாத பாடங்களில் மீண்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம் (H வகையினர்) |
| 2) | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று இரண்டு ஆண்டு இடைவெளியும் 01.09.2013 அன்று 16 ½ வயதும் பூர்த்தி அடைந்தவர்கள் "நேரடித் தனித்தேர்வர்களாக" விண்ணப்பிக்கலாம் (HP வகையினர்). |

**பாடத்திட்டம்**

**I. நேரடித் தனித்தேர்வர்கள் (HP வகை)**

முதன்முதலாக மேல்நிலைத் தேர்வெழுதும் "HP" வகை நேரடித் தனித்தேர்வர்கள், பகுதி I மற்றும் II மொழிப்பாடங்களுடன் பின்வரும் ஐந்து பாடத் தொகுப்புகளில் ஏதேனுமொன்றில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

| பாடத்தொகுப்பு எண் | பகுதி 3 – பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 304 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 305 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 306 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | இந்தியக் கலாச்சாரம் |
| 307 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 308 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் |

**<u>ஆன்–லைனில் விண்ணப்பிப்பதற்கான தேதிகள்</u>**

தனித்தேர்வர்கள் **www.dge.tn.gov.in** அல்லது **tndge.in** என்ற இணையதளத்தில் **05.09.2013 ( வியாழக் கிழமை) முதல் 10.09.2013 (செவ்வாய்க்கிழமை)** வரை தங்கள் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.

**<u>ஆன்–லைனில் பதிவு செய்தலும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தலும்</u>**

தனித்தேர்வர்கள் ஆன்–லைனில் முழுமையாக விவரங்களைப் பூர்த்தி செய்து தமது புகைப்படத்தை அப்லோடு செய்ய வேண்டும். பிறகு, புகைப்படத்துடன் பதிவு செய்த விவரங்களுடன்கூடிய விண்ணப்பத்தினையும், தேர்வுக்கட்டணத்தினை பணமாகச் செலுத்த வேண்டிய பதிவுச் சீட்டினையும் (**Registration Slip**) பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

**<u>ஆன்–லைனில் பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை</u> நேரடியாக <u>சமர்ப்பிக்க வேண்டிய அலுவலகங்கள் பற்றிய விவரம் மற்றும் இறுதி தேதி</u>**

தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது "Place of examination" என்ற இடத்தில் எந்த கல்வி மாவட்டத்தைக் குறிப்பிடுகிறார்களோ, அந்த மாவட்டத்திற்குரிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பம் மற்றும் பதிவுச் சீட்டினை(Registration slip) உரிய இணைப்புகளுடன் நேடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்கள் உரிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் 05 .09.2013 ( வியாழக்கிழமை) முதல் 11.09.2013 ( புதன்கிழமை) (இடையிலுள்ள அரசு விடுமுறை நாட்களான 08.09.2013 மற்றும் 09.09.2013 தவிர்த்து) மாலை 5.45–க்குள் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை</u>**

தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது "Place of examination" என்ற இடத்தில் எந்த கல்வி மாவட்டத்தைக் குறிப்பிடுகிறார்களோ, அந்த மாவட்டத்திற்குரிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் தேர்வுக்கட்டணத்தினை தனித்தேர்வர்கள் பணமாக மட்டுமே செலுத்த வேண்டும். செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் பதிவுச் சீட்டில் (Registration slip) குறிப்பிடப்பட்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| 1. | மறுமுறை தேர்வெழுதுவோர் (H வகை தனித்தேர்வர்கள்) | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/–ம் செலுத்த வேண்டும். |
| 2. | நேரடித் தனித்தேர்வர்கள் (HP வகை தனித்தேர்வர்கள்) | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு ரூ.2/–<br>மொத்தம் ரூ.187/– |

**<u>தனித்தேர்வர்கள் விண்ணப்பத்தினை உரிய மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>**

| | **‘H’ வகையினர்** | | **‘HP’வகையினர்** |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் (மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தவேண்டும்) | 1. | உரிய தேர்வுக் கட்டணம் (மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தவேண்டும்) |
| 2. | சான்றொப்பமிடப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் ஒளிநகல் (இதுவரை எழுதிய மேல்நிலைத் தேர்வுகளுக்கானது). | 2. | பத்தாம் வகுப்பு அல்லது சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ். |
| 3. | பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | 3. | பள்ளி மாறுதல் சான்றிதழின் அசல் |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | இடப்பெயர்வு சான்றிதழ் அசல் (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**இடம்: சென்னை 6.** **(ஓம்/–)**

**நாள் : 04.09.2013** **இயக்குநர்**